**லுணுகம்வெஹெர பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லுணுகம்வெஹெர பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 இன் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் செயற்படுகின்ற பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,031,437 பெறுமதியான எல்லை மதில் மற்றும் சபை வளவில் சிறு கொங்கிரீட் பதிப்பதற்காக கொங்கிரீட் சிறுகற்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 982,017 தொகையான ரூபா 2,013,454 கூட்டுப்பெறுமதியை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 770,772 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 60,538 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வாடகை | 3,054 | 2,387 | 62 |
| ஏனைய வருமானம் | 16,088 | 11,355 | 556 |

#### 2.2.2 வாடகை

பிரதேச சபைக்குரிய 14 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலுள்ளவாறு அறவிடவேண்டிய பணம் ரூபா 62,040 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 02 ஆந் திகதியின் பின்னர் சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட 16 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 79,974 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வீதிகளுக்காக வீதியிலுள்ள குழிகளுக்குள் 2 அங்குல தடிப்பத்தில் கற்துாள் இடப்பட்டிருந்தாகக் காண்பித்து கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி 12 நிர்மாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 02 அங்குல தடிப்பத்தில் வீதியின் குமிகளுக்குள் கற்துாள் இடப்படாதிருந்தமையும் அதனை விடக் குறைவான அளவில் கல்துாள் இடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. பிழையான கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 217,287 தொகையொன்று மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த 02 வேலைகளுக்காக அந்த வீதிகளின் குழிகளுக்குள் 4 அங்குல தடிப்பத்தில் ABC கலவை மற்றும் 02 அங்குல தடிப்பத்தில் கற்துாள் இடப்பட்டதாகக் காண்பித்து ரூபா 286,388 தொகையான கொடுப்பனவிற்காக கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கி மீளளிப்பிற்காக

அனுப்பப்பட்டிருந்தது. கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் வீதிக்கு இடப்பட்டள்ள ABC கலவை மற்றும் கற்துாள் தட்டின் மொத்தத்தடிப்பு 6 அங்குல அளவாக இருக்க வேண்டியிருந்த போதிலும். 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 6 அங்குல தடிப்பத்தில் ABC கலவை மற்றும் கற்துாள் இடப்படாதிருந்தமையும், அவதானிக்கப்பட்டது. பிழையான கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 106,303 தொகை மேலதிகக் கொடுப்பனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்தக்கள் முகாமைத்துவம்
(இ) ஊழியர் கடன் நிர்வாகம்